# BSNL ஊழியர் சங்கம்
# தமிழ் மாநிலம்

**சுற்றறிக்கை எண்:86** **தேதி:-18.12.2015**

## பாதிக்கப்பட்ட ஒப்பந்த ஊழியர்களுக்காக.....

அன்பார்ந்த தோழர்களே,

தமிழகத்தில் சமீபத்தில் ஏற்பட்ட மழை மற்றும் பெருவெள்ளத்தால் ஏழை எளிய நடுத்தர மக்களுடன், உயர் நடுத்தர மக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டனர். மனித நேய மிக்க நமது BSNL ஊழியர்களும், ஒப்பந்த ஊழியர்களும், அதிகாரிகள் பலரும் BSNL ஊழியர் சங்கத்தின் அறைகூவலுக்கு ஏற்ப மனமுவந்து வெள்ள நிவாரணப் பணிகளுக்கு நன்கொடை அளித்துள்ளனர். நம்முடன் பணியாற்றும் பல ஒப்பந்த தொழிலாளர்களும் இந்த மழை வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்தனர். சாதாரண ஏழை எளிய மக்களுக்கு உதவக்கூடிய அதே நேரத்தில் நம்முடன் பணியாற்றும் இந்த ஒப்பந்த தொழிலாளர்களுக்கும் உதவ வேண்டும் என்று நமது தமிழ் மாநில சங்கங்கள் முடிவு செய்தன.

அனைவருக்கும் உதவுவது இயலாது என்ற போதும், மிகக் கடுமையாக பாதிக்கபட்ட ஒப்பந்த தோழர்களுக்கு உதவுவது நமது கடமை என்ற அடிப்படையில் நாம் திரட்டிய நிதியில் ஒரு கணிசமான தொகையை அவர்களுக்கு குறைந்த பட்ச நிவாரணமாக வழங்குவது என்று முடிவு செய்தன. அந்த அடிப்படையில் நமது சென்னை, கடலூர் மற்றும் பாண்டிச்சேரி மாவட்ட செயலர்களிடம் இருந்து கடுமையாக பாதிக்கப்பட்ட தோழர்களின் பட்டியலை பெற்று நமது தமிழ் மாநில சங்கங்கள் அவர்களுக்கும் நிவாரணம் வழங்கி உள்ளது.

அந்த நிகழ்ச்சி 17.12.2015 அன்று மாலை சென்னை தமிழ் மாநில BSNL ஊழியர் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு BSNL ஊழியர் சங்க மாநில துணைத் தலைவர் தோழர் T.பிரேமா மற்றும் TNTCWU மாநில தலைவர் தோழர் M.முருகையா ஆகியோர் தலைமை தாங்கினர். மழை வெள்ளத்தால் உயிரிழந்த சென்னை தொலைபேசியை சார்ந்த தோழர் தெய்வசிகாமணி மற்றும் சாதாரண மக்களுக்கு அஞ்சலி செலுத்திய பின்னர் வந்திருந்த அனைவரையும் TNTCWU மாநில செயலாளர் தோழர் C.வினோத்குமார் வரவேற்றார். இந்த நிகழ்ச்சியில் PGM(F) திரு ரவி, GM(S&M) திரு I.திருநாவுக்கரசு, தோழர் C.பழனிச்சாமி AGS, BSNL CCWF மற்றும் தோழர் P.இந்திரா அமைப்பாளர் BSNL WWCC ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பின்னர் இந்தக் கூட்டத்தில் கலந்துக் கொண்ட மேற்கண்ட சிறப்பு விருந்தினர்கள், CGM அலுவலக முன்னாள் மாவட்ட செயலாளர் தோழர் V.K.முரளிதரன், BSNL ஊழியர் சங்கம் மற்றும் TNTCWU மாநில சங்க நிர்வாகிகள், மாவட்ட செயலர்கள் ஆகியோர் கடுமையாக பாதிக்கப்பட்ட 37 ஒப்பந்த ஊழியர்களுக்கு நமது இரண்டு சங்கங்களின் சார்பாக நிவாரண பொருட்களை வழங்கினர். BSNL ஊழியர் சங்கத்தின் மாநில செயலாளர் தோழர் A.பாபு ராதாகிருஷ்ணன் தொகுத்து வழங்கிய இந்த நிகழ்ச்சியில் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட ஒவ்வொரு ஊழியர்களுக்கும் சுமார் ரூ.4000/- மதிப்புள்ள அரிசி, மளிகை பொருட்கள், சமையல் பாத்திரங்கள், பாய், கொசுவலை, கைலி, T சர்ட், புடவை, நைட்டி, துண்டு உள்ளிட்ட பல பொருட்கள் வழங்கப்பட்டது.

மிகவும் நெகிழ்ச்சியுடன் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் 50 பெண்கள் உட்பட 200க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்றது சிறப்பம்சம். இறுதியாக BSNL ஊழியர் சங்கத்தின் மாநில பொருளாளர் தோழர் K.சீனிவாசன் பங்கேற்ற அனைவருக்கும் நன்றி தெரிவித்து முடித்து வைத்தார்.

வாழ்த்துக்களுடன்,

தோழமையுடன்,

**(A.பாபு ராதாகிருஷ்ணன்)**
**மாநில செயலாளர்**